சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 29.09.2025

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | 102/2025 |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-11 |
| சாட்சியின் பெயர் | : | கர்ணன் |
| தந்தை பெயர் | : | தங்கவேல் |
| கிராமம் | : | ஆலங்குடி |
| தாலுக்கா | : | ஆலங்குடி தாலுக்கா,<br>புதுக்கோட்டை மாவட்டம். |
| தொழில் | : | விற்பனையாளர் |
| வயது | : | 53 |

2025 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 29 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் உதவியாளராக பணிபுரியும் திருமதி. ஆர். அன்பரசி அவர்களால் இந்த சாட்சிக்கு 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

3 மற்றும் 6 எதிரிகள் ஆஜர். 1, 2, 4 எதிரிகள் ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. அரசு வழக்கறிஞர் மற்றும் எதிரிகள் வழக்கறிஞர் ஆஜராகி உள்ளனர்.

<u>முதல் விசாரணை</u>

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். எனக்கு சொந்த ஊர் பெரிய சிங்களாந்தி ஆகும். எனது தாயார் பெரிய சிங்களாந்தியில் இருந்து வருகிறார். நான் அவ்வபோது ஆலங்குடியிலிருந்து என் தாயை பார்க்க பெரிய சிங்களாந்தி வருவேன். அ.சா-1 கார்த்திகேயனை தெரியும். ஆஜர் எதிரி 6 ம் எதிரி சுப்பிரமணியன் என்பவரை தெரியும். கடந்த 30.06.2011 ஆம் தேதி புதுக்கோட்டையிலிருந்து பெரிய சிங்களாந்திக்கு வந்தேன். பெரிய சிங்களாந்தி தனபால் வீட்டின் அருகே ஸ்கார்பியோ மற்றும் இண்டிகா இரண்டு கார் இருந்தது. காரில் இருந்தவர்கள் வீட்டிற்குள் புகுந்து வீட்டில் உள்ள பொருட்களை அடித்து உடைத்தார்கள். அதன் பின்னர் நாங்கள் திருத்துறைப்பூண்டி காவல் நிலையத்திற்கு சென்றோம். அங்கு பள்ளாங்கோவில் ரோட்டில் மறைத்துக்கொண்டு 1 ம் எதிரி ஆறு (எ) சரவணகுமார் அ.சா-2 தனபாலுக்கு ஆதரவாக உள்ளவர்களை எல்லாம் அடிங்கடா என்று சொன்னார். அ.சா-1 கார்த்திகேயன் என்பவருக்கு மண்டை உடைந்துவிட்டது. அவரை மருத்துவனைக்கு அழைத்துச் சென்றோம். போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை. போலீசார் என் முன்னிலையில் எதிரிகளிடமிருந்து எதுவும் கைபற்றினார்களா என்றால் இல்லை.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>

எனக்கு திருமணம் நடந்தது 1998 ஆண்டு பெரிய சிங்களாந்தி கிராமத்திலிருந்து புதுக்கோட்டை மாவட்டத்திற்கு சென்றுவிட்டேன் என்றால் சரிதான். காவல் நிலையத்திற்கு அருகில் பள்ளாங்கோவில் என்ற இடத்தில் எங்களை தாக்கியதாக தொடர்பாக புகார் எதுவும் கொடுக்கப்பட்டதா என்றால் அது சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரிதான். அ.சா-2 தனபால் என்னுடைய அண்ணன் என்றால் சரிதான். நான் முதல் விசாரனையில் சொல்லியுள்ளது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றும், அ.சா-1 எனது தெரிந்தவர் என்ற

காரணத்தினால் வழக்கு சம்மந்தம் இல்லாத விசயங்களை அ.சா-1 சொல்லிக்கொடுத்ததன் பேரில் சொல்லி வருகிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2025.09.29 17:42:49 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.